**கவனிக்க.-** 2007.02.23 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1487 - 2007 මාර්තු 02 වැනි සිකුරාදා - 2007.03.02

1487 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 126 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 129 |


**கவனிக்க.-** (i) சேர் பெறுமதி வரி (திருத்தம்) சட்டமூலம் 2007, சனவரி மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) பற்றுக்கள் வரி (திருத்தம்) சட்டமூலம் 2007, சனவரி மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(iii) நிதி (திருத்தம்) சட்டமூலம் 2007, சனவரி மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, மாச்சு 09 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, பெப்புருவரி 23 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்த்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக் குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரசகரும மொழித்தேர்ச்சிச் சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்கு விதிகள், தாபனக் கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்:**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும்:-

3 : 1 : 1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்தி வைக்கலாம்.

3 : 1 : 2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடை நிறுத்தப்படும். அந்த இடை நிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 3:1:6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3 : 1 : 5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3 : 1 : 6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3 : 1 : 7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3 : 1 : 8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்த்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமரத்தும் நியதிகள்:**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவு தொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவு தொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்தி நிதியத்துக்குத் தனது உதவு தொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளன் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்த போதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின் கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவயாற்றிவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாது காப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டு பிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப்பரீட்சார்த்திகளும்கீழ்வரும்விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர்;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர்;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலி சாரிடம பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகாரசபையால் பரிசீலனை செய்வதற்குற்பட்டதாகும்.

*1.* ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும் போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

*2.* பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

*3.* பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் .

*4.* மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

*5.* பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

*6.* பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

*7.* வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

*8.* பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

*9.* ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

*10.* கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

*11.* பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம், முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப் பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக்கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை , மாட்டுத்தாள், முதலியவற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

*12.* பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

*13.* பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப் பரீட்சார்த்தியடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

*14.* தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

*15.* பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப்பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

*16.* பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்.**

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்தலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப்பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்று பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டு வரமறந்து போனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனிரேகைத் தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக்கருவிகள், பென்சில். அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப்பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டு வருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல் மூலையிலன்று) உமக்கு கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## கடற்றொழில், நீரியல் வளங்கள் அமைச்சு

கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம்

### பணிப்பாளர் (கண்காணிப்பு நடவடிக்கை) பதவி

கடற்றொழில், நீரியல் வளங்கள் அமைச்சின் கீழ் இயங்கும் கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் (கண்காணிப்பு நடவடிக்கை) பதவிக்கு இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகளிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வர்த்தமானி அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2007.04.03 ஆந் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்பதாகவோ கிடைக்கும் பொருட்டு "பணிப்பாளர் நாயகம், கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம், புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10" எனும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

2. விண்ணப்பப்படிவத்தை உள்ளிட்டு அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பணிப்பாளர் (கண்காணிப்பு நடவடிக்கை) பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடல் வேண்டும். குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டிராத அல்லது பூரணப்படுத் தப்படாத அல்லது தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பப் படிவங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவங்கள் கிடைத்தமை பற்றி அறியத் தரப்படமாட்டாது. விண்ணப்பப் படிவம் அல்லது அது சம்பந்தமான ஆவணங்கள் தபாலில் தொலைந்தமை பற்றிச் செய்யப்படும் முறைப்பாடுகள் பற்றிக் கவனம் செலுத்தப்படமாட்டாது. எனவே உரிய திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்புவது விண்ணப்பதாரரின் பொறுப்பாகும்.

2.1 விண்ணப்பங்கள் 21 செ.மீ. x 29.6 செ. மீ. அளவுடைய கடதாசியில் இங்கு தரப்படும் மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கமைய இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் 1 தொடக்கம் 7 வரையான பகுதிகளும் இரண்டாம் பக்கத்தில், 8 தொடக்கம் 12 வரையான பகுதிகளும் எஞ்சியவை மூன்றாவது பக்கத்திலும் அமையப் பெற்றதாக மூன்று பக்கங்களில் தயாரிக்கப்படல் வேண்டும்.

2.2 தற்போது அரசாங்க/மாகாண அரச சேவையிலுள்ள அலுவலர்கள் அனுப்பும் விண்ணப்பங்கள், விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னதாக மேற்குறிப்பிடப்பட்ட முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக திணைக்கள/நிறுவனத் தலைவருக்கூடாக அனுப்புதல் வேண்டும். கடற்றொழில், நீரியல் வளங்கள் பணிப்பாளர் நாயகத்தின் பெயருக்கோ அல்லது வேறு அலுவலர்களின் சொந்தப் பெயருக்கோ விண்ணப்பங்களை அனுப்பலாகாது.

3. **வயதெல்லை.-** விண்ணப்பம் முடிவுத் திகதிக்கு 35 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (உச்ச வயதெல்லை தற்போது அரச சேவையில்/மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு ஏற்புடையதன்று.)

4. **கல்வித் தகைமைகள்.-** வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு-

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பௌதீகவியல், உயிரியல், சமூகவியல், புவியியல், பொருளியல், வர்த்தக வியல், அபிவிருத்தி மற்றும் வியாபார முகாமைத்துவம்/ நிர்வாகம் ஆகிய பாடங்களில் ஒன்றுடன் Iஆம் வகுப்பு அல்லது II ஆம் வகுப்புப் பட்டம் பெற்றிருத்தல்.

அத்துடன்

கடற்றொழில் சம்பந்தமான அல்லது மேற் குறிப்பிடப்பட்ட பாடங்களில் பட்டப் பின் படிப்பு பட்டதாரி/பட்டப் பின் படிப்பு டிப்ளோமாப் பட்டதாரியாக பட்டம் பெற்றிருத்தல்.

அல்லது

(ஆ) இலங்கை நிர்வாக சேவையின் முதலாம் வகுப்பு அலுவலராக இருப்பதோடு, அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரியாகவும் இருத்தல் வேண்டும்.

**உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு.-** கடற்றொழில் துறையில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பௌதீக வியல், உயிரியல் வியாபார முகாமைத்துவம்/நிர்வாகம் ஆகிய பாடங்களில் பட்டப் பின் படிப்பு பட்டம் பெற்றிருத்தல்.

5. **தொழில் தகைமைகள்.-** (அ) வெளிவாரி விண்ணப்பதாரி களுக்கு.- அரச திணைக்களமொன்றில், பல்கலைக்கழகமொன்றில், அரச கூட்டுத்தாபனமொன்றில் அல்லது கடற்றொழில் அல்லது வழிநடத்தல் நடவடிக்கைகள் மற்றும் ஆகாய, கடல் மீட்புச் சேவை நடவடிக்கை சம்பந்தமான துறையில் பட்டப்பின் படிப்பு பட்டத்துடன் பதவிநிலை பதவியொன்றில் 18 வருடங்கள் அல்லது பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பட்டதாரி ஆயின் பதவிநிலை பதவி ஒன்றில் 20 வருடங்கள் சேவையாற்றியவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு.- இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த I ஆம் வகுப்பு அலுவலராக இருக்க வேண்டியதுடன், குறைந்தபட்சம் இலங்கை நிர்வாக சேவையில் 15 வருடங்கள் சேவையாற்றிய அனுபவம் இருத்தல் வேண்டும்.

**உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு.-** கடற்றொழில் அல்லது கண்காணிப்பு நடவடிக்கை மற்றும் ஆகாய, கடல் வழி மீட்பு நடவடிக்கை சம்பந்தமான பட்டப் பின்படிப்பு பட்டம் பெற்ற பதவி நிலை பதவியொன்றில் 18 வருடங்கள் அல்லது பட்டப் பின்படிப்பு டிப்ளோமா பட்டதாரியாயின் பதவிநிலை பதவியொன்றில் 20 வருடங்கள் சேவையாற்றியவராக இருத்தல் வேண்டும்.

6. **சம்பளத் தொகுதியும் அளவுத்திட்டமும்.-** அரச நிர்வாகச் சுற்றறிக்கை 9/2004 TB-7:1 க்கு அமைய ரூபா 2,76,540 - 10 x 11,880 - ரூபா 3,95,340 ஒன்று திரட்டிய சம்பளம் உரித்துடையதாகும்.

(இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்படும் தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளுக்கு 6/2006 ஆம் இலக்க சுற்றுநிருபத்துக்கு அமைய சம்பள ஊழியர் எண்ணிக்கை குழு அனுமதிக்கும் சம்பளத் திட்டத்தில் அமர்த்தப்படுவர்.)

7. **சேர்த்துக்கொள்ளும் முறை.**- தகைமைபெற்ற விண்ணப்ப தாரிகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு அவர்களில் இருந்து கூடிய தகைமை பெற்ற விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படுவார். நேர்முகப் பரீட்சையின் புள்ளி வழங்கும் திட்டம் மற்றும் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக் குழுவை நியமிப்பது அரச சேவைகள் ஆணைக்குழுவே.

8. **சேவை நிபந்தனைகள்.**- (அ) இப்பதவி நிரந்தரமானதும் பங்களிப்பு ஓய்வூதிய நிதியத்தின்கீழ் பங்களிப்பு ஓய்வூதியம் உரித்துடையதாகும்.

**குறிப்பு.**- 2003.01.01 ஆந் திகதிக்கு முன்னிருந்து ஓய்வூதிய உரித்துடைய பதவியில் இருந்தவர் ஒருவர் இப்பதவிக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டால், அவருக்கு தொடர்ந்தும் ஓய்வூதிய யாப்புக்கோவையின் கீழ் ஓய்வூதியம் உரித்துடையதாவதுடன் விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்குப் பங்களிப்புத் தொகையைச் செலுத்துதல் வேண்டும்.

(ஆ) இப்பதவிக்கு நியமனம் பெறுபவர்கள் இலங்கையின் எப்பாகத்திலும் சேவை செய்யக்கூடியவராகவும், சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(இ) தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10 முதல் 12 வரையுள்ள பிரிவுகள் ஏற்புடையனவாகும்.

(ஈ) சகல விண்ணப்பதாரர்களும் இலங்கையராக இருத்தல் வேண்டும். இலங்கையர் என்பது பரம்பரை அல்லது பதிவின் மூலம் இலங்கைப் பிரசை ஆனவர்.

9. வெற்றிடங்களை நிரப்பாதுவிடும் உரிமையும், இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத யாதேனும் ஒரு விடயம் சம்பந்தமாக தம் விருப்பப்படி செயற்படும் உரிமையும் நியமிக்கும் அதிகாரி வசமே உள்ளது.

10. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்.**- சகல பரீட்சார்த்திகளும் (விண்ணப்பதாரிகளும்) நேர்முகப் பரீட்சையின்போது தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்காக கீழ் குறிப்பிடப்படும் யாதேனுமொரு ஆவணத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;

(ஆ) வழங்கப்பட்ட திகதியிலிருந்து 5 வருடங்களுக்கு மேற்படாத வெளிநாட்டுக் கடவுச்சீட்டு.

* வேறு எந்த ஆவணமோ, புகைப் படமோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

11. **தவறான தகவல்களை வழங்குதல் சம்பந்தமாக.**- எந்தவொரு விண்ணப்பதாரியாவது (பரீட்சார்த்தியாவது) இப்பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு தகைமை யற்றவர் என நேர்முகப் பரீட்சைக்கு முதல் அல்லது நேர்முகப் பரீட்சைக்குப் பின்னர் தெரியவரின் அவரின் நியமனம் நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரர் (பரீட்சார்த்தி) சமர்ப்பித்த தகவல்கள் அவரது அறிவுக்கெட்டிய வரையில் தவறானவை எனத் தெரிய வந்தால் அல்லது அவர் வேண்டுமென்றே முக்கியமான தகவல்களைத் தெரிவிக்காது மறைத்திருப்பின் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

அரச சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

ஜீ. பியசேன,
செயலாளர்,
கடற்றொழில், நீரியல் வளங்கள் அமைச்சு.

கடற்றொழில், நீரியல் வளங்கள் அமைச்சு,
புதிய செயலகம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10,
2007, பெப்புருவரி

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கடற்றொழில், நீரியல் வளங்கள் அமைச்சு**

*கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம்*

பணிப்பாளர் (கண்காணிப்பு நடவடிக்கை) பதவி

☐

(அலுவலக உபயோகத்துக்கு).

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
   (ii) முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர்கள் :-----.
   (iii) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) :-----.
   (உ-ம் : Mr/Mrs/Miss :- Sivathasan, A.B.)

2. (i) நிரந்தர முகவரி :-----.
   சொந்த முகவரி :-----.
   (பரீட்சையின் பிரவேச அட்டை அனுப்புவதற்காக உங்கள் முகவரியில் மாற்றம் ஏற்பட்டால் அதனை உடனடியாக அறியத் தரவும்)

   (ii) அலுவலக முகவரி :-----.
   தொலைபேசி இல. :-----.

3. (i) பிறந்த திகதியும் இடமும் :-----.
   (ii) விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :-
   வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :-----.

4. தேசிய அடையாள அட்டையின் இல. :

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

   வழங்கப்பட்ட திகதி :-----.

5. நீங்கள் இலங்கைப் பிரசையா ? (பரம்பரை பிரசை அல்லது பதிவு வழியா என்பதைக் குறிப்பிடுக) :----.

6. (i) பால் (ஆண்-M /பெண்-F) :- ☐

   (ii) சமூக நிலை :-

   திருமணமானவர் ☐

   திருமணமாகாதவர் ☐

   தாரமிழந்தவர் ☐

   (உரிய கூட்டினுள் " X " அடையாளமிடுக.)

7. கல்வி, தொழில் மற்றும் நிபுணத்துவ தகைமைகள் :-----. (பெற்றுக்கொண்ட சகல பட்டங்களையும் தொழில் தகைமைகளையும் கிடைத்த திகதி மற்றும் வகுப்பு பற்றிய விபரங்களுடன் பல்கலைக்கழகத்தின் பெயரையும் குறிப்பிடுக)

| பரீட்சை/ பட்டம் | வருடம் | தோற்றிய பாடங்கள் | வகுப்பு | பாடசாலை/ நிறுவனம்/ பல்கலைக்கழகத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

8. நீங்கள் மத்திய அரச சேவையில்/ மாகாண அரச சேவையில் பதவிநிலை மட்ட பதவியொன்றில் ஈடுபட்டிருப்பின் அது பற்றிய விபரம் (பதவி நிலை மட்டத்துக்குக் கீழே உள்ள பதவிகளில் ஆற்றிய சேவை பற்றிக் குறிப்பிடல் அவசியமன்று):-----.

(i) வகிக்கும் தற்போதைய பதவி மற்றும் சேவை நிலையத்தின் முகவரி :----.

(ii) சேவையில் இணைந்துகொண்ட திகதி மற்றும் வகித்த பதவிகள் (சம்பள அளவுத் திட்டத்துடன்) அப்பதவிகள் கிடைத்த திகதிகள் :----.

| பதவி | திகதியில் | | சம்பள அளவுத் திட்டம் | சேவைக் காலம் |
|---|---|---|---|---|
| | இருந்து | வரை | | |
| | | | | |

(iii) உங்கள் பதவி நிரந்தரமாக்கப்பட்டதா ? ஆம் எனின் எத் திகதி தொடக்கம் :----.

(iv) (அ) நீர் யாதேனும் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு ஆளாகி உள்ளீரா ? :----.
(ஆம் எனின் குற்றம், தண்டனையின் தன்மை, திகதி என்பவற்றைக் குறிப்பிடுக) ----.

(ஆ) உங்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் ஏதும் நடைபெறவுள்ளதா ? :----.

9. வேறு தகைமைகள் :----.

10. நீர் நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீரா? ஆம் எனின் வழக்கு இலக்கம் மற்றும் திகதியுடன் பூரண விபரங்களையும் தருக. வழக்கு விசாரணை முடிந்துவிட்டதாயின் அதன் தீர்ப்பு யாது போன்றவற்றைத் தருக :----.

11. நீர் அரச சேவையில் இருந்து விலக்கப்பட்டுள்ளீரா ? ஆம் எனின் அதன் விபரங்களைத் தருக :----.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை எனவும், உண்மையானவை எனவும் உறுதியுரைக்கிறேன். இங்கு தரப்பட்டுள்ள தகவல்களில் ஏதேனும் பிழையானவை அல்லது பொய்யானவை என நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் தெரிய வந்தால், நான் இப் பதவிக்கு தெரிவுசெய்யப்படும் தகுதியை இழப்பேன் எனவும் தெரிவு செய்யப்பட்ட பின்னர் தெரியவரின் எவ்வித நட்டஈடுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் நன்கு அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

(இப்பகுதி சேவையில் உள்ளவர்களுக்கு மட்டுமே.)

**திணைக்கள / நிறுவனத் தலைவரின் விதப்புரை**

(அ) (i) கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் (கண்காணிப்பு நடவடிக்கை) பதவிக்கு இத் திணைக்களத்தில்/ நிறுவனத்தில் சேவையாற்றும் திரு./ திருமதி/ செல்வி ............................................................ (பெயர்) ............................................................ எனும் பதவியில் உள்ளார் எனவும் 200..... ஆண்டு ..... மாதம் ....... ஆந் திகதிய இலங்கைக் குடியரசின் வர்த்தமான அறிவித்தலுக்கு அமைய மேற்குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பிக்கத் தகைமை உடையவர் எனவும் அவரது வேலை மற்றும் நடத்தை திருப்திகரமானது எனவும் ;

(ii) 200 ............................................................ ஆந் திகதியுடன் முடிவடையும் ..................................... ..................... வருட சேவைக் காலப் பகுதியினுள் அவர் உரிய சம்பள ஏற்றங்கள் அனைத்தையும் பெற்றுள்ளார் எனவும், இக்காலப் பகுதியினுள் (எச்சரிக்கை தவிர்ந்த) வேறு எவ்வித ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகவில்லை எனவும் ;

(iii) மேற்குறிப்பிட்ட தகவல்கள் யாவும் சரியானவை என பரீட்சித்துப் பார்த்ததாகவும், அவை சரியானவை எனவும் சான்றுபடுத்துகிறேன்.

(ஆ) இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டால், இவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/விடுவிக்க முடியாது.

............................................................,
திணைக்கள/ நிறுவனத் தலைவரின் கையொப்பம்,
(பதவி முத்திரை).

பதவிப் பெயர் :----.

திகதி :----.

3-142

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு

வர்த்தக திணைக்களம்

### வர்த்தக உதவிப் பணிப்பாளர் பதவி

ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் கீழ்வரும் வர்த்தக திணைக்களத்தில் வர்த்தக உதவி பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ் அறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம், அமைப்பு மற்றும் வெளிவாரி பரீட்சை பிரிவு, பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு 2007.04.21 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

**குறிப்பு.**- பிந்திவரும் விண்ணப்பங்கள், அல்லது அஞ்சலில் விண்ணப்பங்கள் தவறிவிட்டன எனச் செய்யும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

2. **சேவைக்கமர்த்தும் நியதிகள் :** பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும். அத்துடன் விதவைகள், அநாதைகள்/தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதிக்கு பங்களிப்பு செய்யப்படுதல் வேண்டும்.

3. **சம்பள அளவுத்திட்டம்.**- சம்பள அளவுத்திட்டம் (எஸ்எல் 1) : ரூபா 22,935 - 10 x 645 - 8 x 790 - 17 x 1,050 - ரூபா 53,555 மாதமொன்றிற்கு.

**வினைத்திறன் காண் தடை.**- இரண்டு வினைத்திறமை காண் தடைகளுண்டு. நியமனம் பெற்று மூன்று ஆண்டுகளுக்குள் முதலாம் வினைத்திறமை காண் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். நியமனம் பெற்று ஏழு ஆண்டுகளுக்குள் இரண்டாவதில் சித்தியடைதல் வேண்டும். 45 வயதைக் கடந்தாலும் வினைத்திறமை காண் பரீட்சையிலிருந்து விலக்களிக்கப்படமாட்டாது.

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் (எஸ்எல்ஐடிஏ) முதலாம் வினைத்திறமை காண் எழுத்துப் பரீட்சையை நடாத்தும் பரீட்சை விபரங்களுக்கு இணைப்பு 1 ஐப் பார்க்கவும்.

இரண்டாம் வினைத்திறமை காண் தடைக்கு பட்டப்பின்படிப்பு பட்டம் முடித்திருத்தல் வேண்டும். அல்லது பொருளியல், தொழில் நிர்வாகம் அல்லது சர்வதேச வர்த்தகம் ஆகியவற்றில் பட்டபின்படிப்பு டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும். அல்லது விண்ணப்பதாரர் உலக வரத்தக அமைப்பு (டபிள்யூரிஓ) நடாத்தும் விசேட பயிற்சி நெறியை இந்த பாடங்களில் முடித்திருத்தல் வேண்டும். இதற்கு பிரவேசிப்பதற்கு அடிப்படை தகைமை முதற் தரமாகவிருக்கும்.

4. **பிறநாட்டு சேவை.**- உத்தியோகத்தர்கள் காலத்துக்கு காலம் பிற நாடுகளில் பணிபுரிய வேண்டி ஏற்படும். இதற்கு இவர் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட படிக்கு உரித்துடையவராவார்.

5. **கல்வித் தகைமைகள்.**- ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பின்வரும் தகவல்களை பெற்றுள்ளார் என்பதற்கு திருப்தியான சான்றுகள் வேண்டும்.

(i) பொருளியல், வர்த்தகம், வியாபாரம் அல்லது பொது நிருவாகம் ஆகியவற்றில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தின் முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும். அல்லது ஒரு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பொருளியல் அல்லது வர்த்தக பாடத்தில் முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு பட்டம் பெற்றவராயிருத்தல் வேண்டும். அல்லது,

(ii) அங்கீகரிக்கப்பெற்ற பல்கலைக்கழகத்திலிருந்து பொருளியல், வர்த்தகம், வியாபாரம், பொது நிருவாகம் ஆகியவற்றில் முதுமாணிப்பட்டம் அல்லது கலாநிதி பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

(iii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பட்டமும் இலங்கை சட்டக் கல்லூரியின் சட்டத்தரணிக்குச் சமமான சட்டத்தில் உயர் தொழில்பட்டமும் அத்துடன் சட்டம், நிருவாகம் அல்லது வர்த்தக அலுவல்களில் 3 ஆண்டு கால அனுபவ முடையவராக இருத்தல் வேண்டும்.

(iv) அங்கீகரிக்கப்பெற்ற பல்கலைக்கழகத்திலிருந்து பட்டமும் இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகத்தின் அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவகத்தில் உறுப்புரிமைக்கு சமமான கணக்கியல் உயர் தொழில் தகைமை பெற்றவராயிருத்தல் வேண்டும். அத்துடன் சட்டம், நிருவாகம், வர்த்தகம் ஆகியவற்றில் 3 ஆண்டு கால அனுபவம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**- பரீட்சார்த்திகள் விண்ணப்பங்கள் முடியும் திகதியில் தகைமை தேவைகள் யாவற்றையும் திருப்திப்படுத்துபவர்களாக இருத்தல் வேண்டும்.

6. **வயதெல்லை.**- விண்ணப்பங்கள் முடியும் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவர்களாகவும் 45 வயதிற்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையில் அல்லது மாகாண சேவையில் இருக்கும் விண்ணப்பதாரிகளுக்கு மேல் வயதெல்லை பொருந்தாது.

7. **ஆட்சேர்ப்பு முறை.**- எழுத்து மூல போட்டிப் பரீட்சையானது பாடத்திட்டம் மற்றும் பரீட்சை பாடத்திட்டம் என்பவற்றிற்கு அமைவாக அடிப்படைத் தகைமைகளை உடைய பரீட்சார்த்திகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடாத்தப்படும். நேர்முகப் பரீட்சையானது தகைமைகளையும் சான்றிதழ்களையும் சரிபார்ப்பதற்கே நடைபெறும்.

*பரீட்சை நடைமுறைகள் :*

1. நுண்ணறிவுப் பரீட்சை(1 மணி நேர வினாப் பத்திரம்) - 100 புள்ளிகள்
2. வர்த்தக மற்றும் பொருளியல் (2 மணி நேரவினாப் பத்திரம்) - 100 புள்ளிகள்
3. ஆங்கில பாட வினாப் பத்திரம்(2 மணி நேர வினாப் பத்திரம்) - 100 புள்ளிகள்

**பாடத்திட்டம் :**

*நுண்ணறிவுப் பரீட்சை.*- இது பரீட்சார்த்தியின் வாத பொருத்த முடைய நியாயம் பேசும் திறன், பகுப்பாய்வு செய்தல், தகுந்த ஊகம் செய்தல் ஆகிய திறன்களை மதிப்பீடு செய்வதற்காகும். கேள்வித்தாள் பன்முக தேர்ந்தெடுக்கும் வகையானதாகும்.

*வர்த்தகம் மற்றும் பொருளியல் பொதுபத்திரம்.*- இலங்கையிலும் பிற நாடுகளிலும் உள்ள வர்த்தக பொருளாதார சூழல்பற்றிய பரீட்சார்த்தியின் அறிவை பரிசோதிப்பதாகும்.

*ஆங்கிலப் பாடப்பத்திரம்.*- இலக்கணம், சொற்றொகுதி, புரிந்து கொள்ளும் திறன் ஆகியவை பற்றி பரீட்சார்த்தியின் அறிவை மதிப்பிடுவதற்காகும்.

8. (i) பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மொழியிலேயே விண்ணப்பங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். (ஏ 4 அளவுதாளில் முதல் பக்கத்தில் 1 - 9 வரையான விடயங்கள் இருத்தல் வேண்டும்.)

(ii) விண்ணப்பம் கிடைத்ததென அறிவிக்கப்படமாட்டாது.

(iii) விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னதாக முறையாக பூர்த்தி செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியிருந்த விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் வழங்கியவுடன் ஒரு அறிவித்தல் பத்திரிகையில் வெளியிடப்படும். அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள், பரீட்சை நடைபெறுவதற்கு குறைந்தது 7 நாட்களுக்கு முன்னதாக "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் பிரிவு, பரீட்சை திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு பின்வரும் விபரங்களுடன் அறிவித்தல் வேண்டும் :-

(அ) பரீட்சையின் பெயர் ;
(ஆ) பரீட்சாத்தியின் முழுப்பெயர் ;
(இ) முகவரி ;
(ஈ) விண்ணப்பம் அனுப்பிய திகதி, பதிவிலக்கம் மற்றும் அஞ்சல் அலுவலகம்

(iv) அத்துடன் பரீட்சையின் பெயரை சிங்களம் அல்லது தமிழ் மொழிக்கு மேலாக ஆங்கிலத்திலும் எழுதுவது அவசியமாகும்.

9. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் ரூபா 300 ஆகும். முடிவுத் திகதிக்கு முன்பாக ஏதேனும் மாவட்ட/பிரதேச செயலகத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமான தலைப்பு இல. 4000-20-0302-13 இல் செலுத்தப்படுதல் வேண்டும். அத்துடன் அப் பற்றுச்சீட்டினை விண்ணபத்தில் உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். இக் கட்டணமானது, எச் சந்தர்ப்பத்திலும் மீளளிக்கப்படவோ அல்லது வேறேதும் பரீட்சைக்கு மாற்றப்படவோ மாட்டாது.

10. **பரீட்சை** :

(i) பரீட்சைத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

(ii) பரீட்சையை தள்ளுபடி செய்வதற்கோ, ஒத்திவைப்பதற்கோ பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கு உரிமை உண்டு.

11. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அந்தந்த திணைக்கள தலைவர்களின் ஊடாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். எப்படியாயினும், அவர்கள் விண்ணப்பம் அனுப்பியிருப்பதனை விண்ணப்ப கடைசித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு நேரடியாக அறிவித்தல் வேண்டும்.

12. விண்ணப்பங்கள் அல்லது ஏதேனும் அது தொடர்பான தொடர்பாடல்களை பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டுமேயன்றி பரீட்சை திணைக்களத்திலுள்ள வேறெந்த ஊழியருக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்புதல் கூடாது.

13. அரச சேவையிலுள்ள பதவி நியமனங்களுக்கு பொருத்தமான பொது நிபந்தனைகள் வர்த்தமானி பகுதி I : தொகுதி (IIஅ) இல் பிரசுரிக்கப்பட்டுள்ளன. அதனைப் பார்க்கவும்.

14. **பரீட்சைக்கு அனுமதித்தல்**.- (அ) பரீட்சை ஆணையாளர் நாயகம், தேவையான தகைமைகளுடைய விண்ணப்பதாரிகள் அனைவருக்கும் அனுமதி அட்டைகளை வழங்குவார். பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகள் அனுமதி அட்டையில் முறையாக கையெழுத்திட்டு அப்பரீட்சை நிலையத்தின் மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்க தவறும் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

(ஆ) பரீட்சார்த்தி அவருக்காக ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பரீட்சை நடைபெறும் முதல் நாள் எல்லா பரீட்சார்த்திகளும் பரீட்சை மேற்பார்வையாளரிடம் அனுமதி அட்டையை கையளித்தல் வேண்டும். எல்லா பரீட்சார்த்திகளும் பின்பற்ற வேண்டிய விதிகள் இந்த வர்த்தமானியில் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

**குறிப்பு**.- அனுமதி அட்டையை ஒரு பரீட்சார்த்திக்கு வழங்கு வதனால் அப்பரீட்சார்த்தி பரீட்சைக்கு தோற்றுவதற்கு தேவையான தகைமைகளை கொண்டுள்ளார் எனக் கொள்ளமுடியாது.

15. **பரீட்சார்த்திகளை அடையாளம் காட்டல்**.- ஒரு பரீட்சார்த்தி தனது அடையாளத்தை அவர் தோற்றும் ஒவ்வொரு பாடத்திலும் மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் நிரூபித்தல் வேண்டும். இதற்காக பின்வரும் பத்திரங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவு திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை
(ஆ) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு

16. **தவறான தகவல் தருபவர்களுக்கான தண்டனை**.- ஒரு பரீட்சார்த்தி தகுதியற்றவரென காணப்பட்டால் அவர் எந்த கட்டத்திலாயினும், பரீட்சைக்கு முன், பரீட்சை நடைபெறும்பொழுது அல்லது முடிந்தவுடன் தள்ளுபடி செய்யப்படுவார். பரீட்சார்த்தி கொடுத்த விபரம் எதுவும் தவறானதென அவருடைய அறிவுக்குட்பட்டு காணப்படின் அல்லது வேண்டுமென்று எந்த தகவல்களையாவது மறைத்துவிட்டால், அவர் அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்படுவார் அல்லது அவருடைய நியமனம் தள்ளுபடி செய்யப்படும்.

17. இந்த பிரமாணங்களில் எந்த விடயமும் ஏற்பாடு செய்யப்படாது விடின் அது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் முடிவின்படி கையாளப்படும்.

18. **பரீட்சைத் திட்டம்**.- (அ) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடைபெறும்.

(ஆ) ஒரு பரீட்சார்த்தி தகுதிபெற்ற பரீட்சையில் எந்த மொழியில் சித்தியடைந்தாரோ அந்த மொழியிலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். அல்லது அரச கரும மொழியில் தோற்றுதல் வேண்டும்.

(இ) ஒரு பரீட்சார்த்தி தகுதிபெற்ற பரீட்சையில் தோற்றிய பாடங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் தோற்றிய பெரும்பாலான பாடங்கள் எந்த மொழியில் சித்தியடைந்தாரோ அந்த மொழியிலேயே இந்தப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

(ஈ) விசேட பட்டம் பெற்ற ஒரு பரீட்சார்த்தி முக்கிய பாடம் ஒரு மொழியிலும் துணைப்பாடங்கள் இன்னொரு மொழியிலும் தோற்றியிருப்பாராயின் முக்கிய பாடம் எந்த மொழியில் சித்தியடைந்தாரோ, அந்த மொழியில் இந்த பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

**குறிப்பு :**

(i) மேற்படி (ஆ) இலும் (இ) இலும் தகுதிபெற்ற பரீட்சை என்ற பதம் பந்தி 5 இல் குறிப்பிட்ட தகைமையைக் குறிக்கும்.

(ii) இப்பரீட்சையில் எல்லா கேள்விப்பத்திரங்களிலும் ஒரு மொழியிலேயே பரீட்சார்த்தி தோற்றுதல் வேண்டும்.

(iii) பரீட்சைக்குத் தோற்றும் மொழியில் மாற்றம் செய்ய பரீட்சார்த்தி அனுமதிக்கப்படமாட்டார்.

19. பரீட்சார்த்திகள் தேவையேற்படும்போது பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தயாராக இருத்தல் வேண்டும் :-

(அ) பிறப்பு பதிவுச் சான்றிதழ்

(உதவிபெறும் பாடசாலைகளுக்கான பிரமாணங்களுக்காக வழங்கப்படும் பிறப்புச் சான்றிதழ் அல்லது ஞானஸ்தானச் சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

(ஆ) பட்டம் அல்லது உயர் கல்விச் சான்றிதழ்

(இ) நற்பண்புச் சான்றிதழ்கள் இரண்டு. இவற்றுள் ஒன்று கல்லூரி கல்விப் பணிப்பாளர், தனிமுறைக்கல்வி ஆசான் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) உயர்தொழில் அல்லது தொழில்நுட்ப தகைமை பற்றிய சான்றிதழ்

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் தேறிய மிக உயர் பரீட்சைச்சான்றிதழ்.

**குறிப்பு :**

(i) விண்ணப்பப்படிவங்களுடன் எந்த ஆவணங்களோ அல்லது பத்திரங்களோ இணைக்கப்படக் கூடாது.

(ii) பொருத்தமான ஆவணங்கள் எதனையும் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி சம்பந்தப்பட்ட பதவிக்கு கவனிக்கப்படமாட்டார்.

20. **நியமனத்திற்குத் தெரிவுசெய்யும் முறை.**- பரீட்சார்த்திகள் ஒரே சமமான புள்ளிகளைப் பெற்றிருந்தால் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர் பொருத்தமான தீர்மானத்தைச் செய்வார். அந்த தீர்மானம் இறுதியானதாகும். எழுத்துமூலப் பரீட்சையில் மிகக் கூடுதலான புள்ளிகளைப் பெற்றவர்களிடமிருந்து பதவிகளுக்கு நியமனம் செய்யப்படும்.

21. வெற்றிடங்களை நிரப்பாது விடுவதற்கு அல்லது எல்லா வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு அல்லது வெற்றிடங்களில் எதனையும் நிரப்பாது விடுவதற்கு அரசாங்க சேவை ஆணைக் குழுவுக்கு உரிமையுண்டு.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எஸ். ரணுக்கே,
செயலாளர்,
ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் சர்வதேச
வர்த்தக அமைச்சு.

ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு,
6 ஆவது மாடி,
"ரக்ஷண மந்திரய",
கொழும்பு 2,
2007..................... .

*இணைப்பு 1*

**முதலாம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை**

இது ஒரு எழுத்துமூலப் பரீட்சை. இங்கே இரண்டு கேள்விப்பத்திரங்கள் உண்டு. அவை பின்வரும் விடயங்களை உள்ளடக்கும் :-

1. நிதியும் முகாமைத்துவமும் - (2 மணி நேரம்) - 100 புள்ளிகள்

(அ) பொது நிதியும் கேள்விப்பத்திர நடைமுறையும். நிதிப் பிரமாணங்களின் அதிகாரம் 5, 6 மற்றும் 13 பற்றிய அறிவு.

(ஆ) தாபனக்கோவையின் இரண்டாம் அதிகாரம்

2. இலங்கையின் நவீன பொருளாதார அபிவிருத்தி, சர்வதேச வர்த்தகம், அரசாங்கத்தின் சர்வதேச வர்த்தக, வாணிபக் கொள்கை (2 மணி நேரம்) - 100 புள்ளிகள்

ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சையில், ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தது 40% புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

இரண்டு பாடங்களிலும் ஒரே அமர்வில் அல்லது வேறு அமர்வில் தோற்றுதல் வேண்டும்.

இந்தப் பரீட்சை இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் நடாத்தப்படும்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு**
*வர்த்தக திணைக்களம்*
வர்த்தக உதவிப் பணிப்பாளர் பதவி

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

(**கவனிக்குக.**- விண்ணப்பத்தைக் கொண்டிருக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வர்த்தகத் திணைக்களத்தில் "வர்த்தக உதவிப் பணிப்பாளர் பதவி" எனத் தெளிவாகக் குறிப்பிடுக.)

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
(முதலெழுத்துக்கள் பெயரின் பின் எழுதப்படல் வேண்டும்)
(உ-ம்) சில்வா, ஈ. பி.
(ii) முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர்கள் :-----.
(iii) முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களம்/தமிழ்) :-----.

2. தபால் முகவரி :-----.
(மாற்றம் ஏதேனும் இருப்பின் அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரியை உடனடியாக அறிவிக்கவும்)

3. தேசிய அடையாள அட்டை இல. :-

4. மொழி மூலம் (பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் மொழி):-
(சிங்களம் - 2, தமிழ் - 3, ஆங்கிலம் - 4) (உரிய இலக்கத்தைக் கூட்டில் இடவும்)

5. பிறந்த திகதியும் இடமும் :-

ஆண்டு : மாதம் : திகதி :

(i) பிறந்த இடம் :-----.

(ii) வர்த்தமானி அறிவித்தலின்படியான வயது :-

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

6. தேசிய இனம் :-

சிங்களவர் - 1
இலங்கைத் தமிழர் - 2
இந்தியத் தமிழர் - 3
இஸ்லாமியர் - 4
பறங்கியர் - 5
மலாயர் - 6
ஏனையோர் - 7

(தயவுசெய்து உரிய இலக்கத்தைக் கூட்டில் இடவும்.)

7. வசிப்பிட மாவட்டம் :-----.

8. திருமணமானவரா, திருமணமாகாதவரா, விதவையா அல்லது தபுதாரரா? எனக் குறிப்பிடுக :-----.

9. (அ) கல்வித் தகைமைகள் (பட்டங்கள், உயர் தொழில் மற்றும் தொழில்நுட்பத் தகைமைகள் முதலியன, திகதிகள் பெற்ற வகுப்பு இருப்பின், எடுத்த பாடங்கள் நிறுவனங்களின் பெயர்களைத் தருக.) :-

| பரீட்சை/பட்டம் | ஆண்டு | பாடங்கள் |
|---|---|---|
| | | |

(ஆ) சித்தியடைந்த உயர் பரீட்சை :-

| | 1. சிங்களம் | 2. தமிழ் | 3. ஆங்கிலம் |
|---|---|---|---|
| 1 | | | |
| 2 | | | |
| 3 | | | |

10. 12 வயது தொடக்கம் சென்ற பாடசாலைகள், கல்லூரிகள் மற்றும் பிற நிறுவனங்கள் :-

| | பொதுக் கல்வி | | |
|---|---|---|---|
| | பாடசாலை அல்லது கல்லூரி | தொடக்கம் | வரை |
| 1 | ................................................ | .............. | ......... |
| 2 | ................................................ | .............. | ......... |
| 3 | ................................................ | .............. | ......... |
| 4 | ................................................ | .............. | ......... |
| 5 | ................................................ | .............. | ......... |

| | உயர் தொழில் கல்வி | | |
|---|---|---|---|
| | நிறுவனம் | தொடக்கம் | வரை |
| 1 | ................................................ | .............. | ......... |
| 2 | ................................................ | .............. | ......... |
| 3 | ................................................ | .............. | ......... |
| 4 | ................................................ | .............. | ......... |
| 5 | ................................................ | .............. | ......... |

11. விளையாட்டுத்துறையில் பெற்ற திறமையும் அத் துறையில் பெற்ற பொறுப்பும் :-----.

12. (அ) பணமுடை இருக்கிறதா ? அவ்வாறு இருப்பின் எவ்வளவு ? :- ----.

(ஆ) நீதிமன்றில் ஏதாவது குற்றவியல் தவறுக்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதா ? அவ்வாறு தாக்கல் செய்யப்பட்டதாயின் முழு விபரத்தையும் திகதிகளுடன் வழக்கு இலக்கத்தையும் தருக ? :-----.

13. தற்போது வகிக்கும் பதவியும் முன்னர் வகித்த பதவி பற்றிய விபரம் (வகித்த பதவித் திகதியும் கடைசியாகப் பெற்ற ஆண்டுச் சம்பளமும்) :-

| | பதவி | இருந்து | வரை | ஆண்டுச் சம்பளம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |
| 5. | | | | |
| 6. | | | | |
| 7. | | | | |

**முக்கிய குறிப்பு**.- அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்பட்டிருந்தால் அதன் விபரத்தை 15 ஆம் கூட்டில் குறிப்பிடுக :-----.

14. விசேட தகைமைகள் :-----.
(அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விசேட தகைமைகள் அல்லது அனுபவம் இருப்பின் தருக.)
அவ்வாறெனில், அவை பற்றிய முழு விபரங்களையும் திகதிளுடன் தருக :-----.
வர்த்தமானியில் ஏதேனும் விதித்துரைக்கப்பட்டிருந்தால், விசேட தேவைப்பாடுகளைப் பார்க்கவும்.

15. வேறு ஏதாவது விபரங்கள் :-----.

16. பற்றுச்சீட்டு இலக்கம் :-----. ☐

(பற்றுச்சீட்டைச் சரியாக ஒட்டவும்)

மாவட்டம்/பிரதேச செயலகம் :-----. திகதி :-----.

17. இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் இத்தால் உறுதியுரைக்கிறேன். இதில் தரப்பட்டுள்ள ஏதேனும் ஒரு விடயம் பொய்யானதென்றோ அல்லது பிழையானதென்றோ தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் தெரியவருமாயின் நான் இப்பதவிக்குத் தகுதியற்றவனாவேன் என்றும், நியமனத்தின் பின்னர் தெரியவருமாயின் எதுவித நட்டஈடுமின்றி பதவிநீக்கத்திற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

..........................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**திணைக்களத் தலைவரின் சான்றுரை**

(ஏற்கனவே அரச சேவை/மாகாண அரச சேவையில் பணியாற்று வோருக்கு மட்டும்)

மேலே பந்தி 14 இல் தரப்பட்ட தகவல்கள் சரியானவையென்றும்/பின்வருமாறு திருத்தப்படுதல் வேண்டும் என்றும், இவரது வேலையும் நடத்தையும் ....................................... என்றும், அத்தாட்சிப்படுத்துகிறேன். இவர் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டால் இவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/விடுவிக்க முடியாது.

......................................
திணைக்கள/நிறுவனத் தலைவரின்
கையொப்பம்.

பதவிப் பெயர் :-----.

திகதி :-----.

3-171

---

## ஆரம்பதர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப் பரீட்சை - 2007 மாச்சு

1991.05.17 ஆந் திகதியும் 662/11 ஆம் இலக்கமும் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள சுகாதார சேவையின் வைத்திய உத்தியோகத்தர்கள் தொடர்பான நியதிச் சட்டக் கோவையின் 07 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் ஆரம்ப தர வைத்திய உத்தியோ கத்தர்களையும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர் களையும் II ஆம் தரத்திற்கு உயர்த்துவதற்கு முன்பு தேர்ச்சியடைய வேண்டிய திணைக்களப் பரீட்சை 2007.03.25 ஆந் திகதி சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது. பரீட்சை நடாத்தப்படும் இடமும் கால அட்டவணையும் அனுமதி அட்டையுடன் அனுப்பி வைக்கப்படும்.

2. **தகைமைகள்**.- இதுவரை இப்பரீட்சையைப் பூரணப்படுத்தாத ஆரம்ப தரத்தின் வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்கு மட்டும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்.

3. **விண்ணப்பங்கள்**.- இச்சுற்று நிரூபத்தில் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்பப்படிவத்தைப் போன்று விண்ணப்பதாரர்களினால் தயாரித்துக்கொள்ளப்பட்ட விண்ணப் பங்கள் நிறுவனத் தலைவரின் மூலம் "கொழும்பு 10, இலக்கம் 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, சுவசிரிபாய கட்டிடம், பணிப்பாளர் (பரீட்சை)" அவர்களுக்கு 2007.03.09 ஆந் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்பு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பவேண்டும். தனது விண்ணப்பத்துடன் முகவரி எழுதப்பட்டு ரூபா 5.00 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட 9"x4" அளவுள்ள கடித உறையொன்றும் அனுப்ப வேண்டும் (இதில் விரும்பிய வகையில் அலுவலக முகவரி அல்லது சொந்த முகவரியை எழுதலாம்).

4. **பரீட்சைக் கட்டணம்**.- (i) முதன் முறையாகப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள், பரீட்சைக் கட்டணத்தினின்றும் விதிவிலக்கப்படுவர். ஏனைய விண்ணப்பதாரர்கள் ஒரு விடயத்திற்கு ரூபா 25/- வீதம் மதிப்பிழக்கப்படாத முத்திரைகளை விண்ணப்பத்தில் ஒட்டி அதன் மேல் தனது கையொப்பத்தையும் திகதியையும் இட்டு அதை செல்லுபடியற்றதாக்கல் வேண்டும்.

(ii) எக்காரணத்தைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் வேறு பரீட்சையொன்றின் பொருட்டு மாற்றவோ அல்லது மீளச் செலுத்தப்படமாட்டாது.

5. **பரீட்சைக்கு உட்படுத்திக்கொள்தல்**.- (i) ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்படும். அவ் அனுமதி அட்டைகளை உரிய முறையில் நிரப்பி பரீட்சை நிலைய அதிபருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டைகள் சமர்ப்பிக்கப்படாத எந்தஒரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்.

(ii) விண்ணப்பதாரர்களினால் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை நிலைய அதிபருக்குத் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதன் பொருட்டு கீழே குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) தேசிய அடையாள அட்டை ;

(ஆ) திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை ;

(இ) சாரதி அனுமதிப்பத்திரம் ;

(ஈ) கடவுச்சீட்டு.

6. **பரீட்சைத் திட்டம்**.- இப்பரீட்சை மூன்று எழுத்து மூல வினாப்பத்திரங்களையும் சிங்களம்/ தமிழ் வாய்மொழிப் பரீட்சையொன்றையும் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிற்கும் 100 புள்ளிகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. தேர்ச்சியடைவதன் பொருட்டு ஒரு விடயத்திற்கு குறைந்தபட்சம் 50 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒரு அமர்வில் அல்லது பல அமர்வுகளில் பிரிவுகளுக்குத் தோற்றி பரீட்சையைப் பூரணப்படுத்திக் கொள்ளலாம்.

7. **பரீட்சைப் பாடத்திட்டம் :**

7.1 எழுத்துப் பரீட்சை

7.1.1 **தாபனவிதிக்கோவை** - (காலம் 02 மணித்தியாலம்) 08 வினாக்களில் 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.
- மொத்தப் புள்ளிகள் 100.

பாடவிதானம்

I. தாபனவிதிக்கோவை

(அ) I ஆம் பிரிவு ii, iii, v, vi, vii, viii, ix, xi, xii, xiii, xv, xxiv, xxv, xxvii, xxviii, xxx, xxxi, xxxii, xxxiii அத்தியாயங்கள்.

(ஆ) IIஆம் பிரிவு XLVII, XLVIII ஆகிய அத்தியாயங்கள்.

II. சுகாதார சேவைத் திணைக்களத்தின் பொதுவான ஒழுங்குவிதிகள்

III. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைகள்.

7.1.2 வைத்தியசாலைகள், மருந்துச்சாலைகள் என்பனவற்றின் நிர்வாகம் நேரம் : 1 1/2 மணித்தியாலம். 07 வினாக்களில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.
- மொத்தப்புள்ளிகள் 100.

**பாடவிதானம்**

சுகாதாரக் கைநூல்

I ஆம் பிரிவு - வைத்தியசேவை

II ஆம் பிரிவு - இரசாயணகூட சேவை

7.1.3 கணக்கியல் (நேரம் 02 மணித்தியாலம்) 07 வினாக்களில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.
- மொத்தப் புள்ளிகள் 100.

**பாடவிதானம்**

I. நிதிப்பிரமானம் - I ஆம் பிரிவு

I ஆம் அத்தியாயம் - எல்லாப் பிரிவுகளுக்கும்

II ஆம் அத்தியாயம் - எல்லாப் பிரிவுகளுக்கும்

III ஆம் அத்தியாயம் - எல்லாப் பிரிவுகளுக்கும்

IV ஆம் அத்தியாயம் - எல்லாப் பிரிவுகளுக்கும்

V ஆம் அத்தியாயம் - 1, 2, 3, 4, 6 ஆம் பிரிவுகள்

VI ஆம் அத்தியாயம் - எல்லாப் பிரிவுகளுக்கும்

VII ஆம் அத்தியாயம் - 1, 2, 3, 4, 6 ஆம் பிரிவுகள்

II. சுகாதாரத் திணைக்களத்தில் களஞ்சியக் கணக்கு வைத்தல் தொடர்பான ஒழுங்குவிதிகள்.

III. சுகாதாரத் திணைக்களத்தில் வழிகாட்டிக் கைநூலில் நிதி தொடர்பான பந்தி.

IV. சுகாதார வைத்திய உத்தியோகத்தர் ஒருவரின் நாளாந்த கடமைகளுக்கு ஏற்புடைய நிதிப்பிரமாணம்.

7.2 சிங்களம்/ தமிழ் வாய்மொழிப் பரீட்சை
சிங்களம்/ தமிழ் ஆற்றலை அளப்பதன் பொருட்டு திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்களினால் கொழும்பில் நடாத்தப்படும் வாய்மொழிப் பரீட்சையாகும். மொத்தப்புள்ளிகள் 100. தனது நாளாந்த கடமைகளில் ஈடுபடும்பொழுது மேலோங்கும் நிகழ்வுகளின் பொருட்டு சிங்களத்தில் அல்லது தமிழ் மொழியில் கலந்துரையாடுவதற்கு உத்தியோகத்தருக்கு உள்ள ஆற்றலைப் பரீட்சித்தல்.

8. தயவுசெய்து இச்சுற்று நிருபத்தை உங்கள் பிரிவில்/ விசேட இயக்கத்தில்/ நிறுவனத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவும். இத்தகவல்கள் www.health.gov.lk

வைத்தியர் யூ. ஏ. அஜித் மெண்டிஸ்,
பிரதி சுகாதாரசேவைப் பணிப்பாளர் நாயகம்.

சுகாதார போஷணை நலன்நோம்பு அமைச்சு,
"சுவசிறிபாய",
385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10,
2007.02.13.

| அலுவலகப் பிரயோகத்தின் பொருட்டு |
|---|
| |

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப் பரீட்சை - 2007, மாச்சு**

Departmental Examination for Preliminary Grade Medical Officers & Dental Surgeons -2007 March

1.(அ)(i) விண்ணப்பதாரரின் பெயர் (சிங்களத்தில் அல்லது தமிழில் முதலெழுத்துக்களை இறுதியில் எழுதவும்) :-----.

(ii) விண்ணப்பதாரரின் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில் முதலெழுத்துக்களை இறுதியில் எழுதவும்) :-----.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

(iii) முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள் (சிங்களத்தில் அல்லது தமிழில்) :-----.

(iv) முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :-

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

(ஆ)(i) அலுவலகப் பெயர் (வைத்திய உத்தியோகத்தர்/ பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்) :-----.

(ii) தகுதிகூர் நிலைக்கால நியமனம் பெற்ற திகதி :-----.

(iii) ஆரம்ப தரத்திற்கு நியமிக்கப்பட்ட திகதி :-----.

2. நீங்கள் இம்முறை தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் விடயங்களுக்கு முன்னால் உள்ள கூண்டினுள் ( √ ) அடையாளத்தை இடவும். தோற்றாவிடின் (X) குறியை இடவும்.

| தாபனவிதிக்கோவை | |
|---|---|

| | |
|---|---|
| வைத்தியசாலைகள் மருந்துச் சாலைகள் என்பனவற்றின் நிர்வாகம் | |
| கணக்கியல் | |
| சிங்களம் வாய்மொழி | |
| தமிழ் வாய்மொழி | |

03. (அ) தற்பொழுது சேவையாற்றும் இடம் :-----.
(ஆ) அதற்குரிய மாவட்டம் :-----.
(இ) பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மாவட்டம் :-----.
(ஈ) அனுமதிப்பதிரம் அனுப்புவதன் பொருட்டு பிழையற்ற தெளிவாக முகவரி எழுதப்பட்ட 9" x 4" அளவுள்ள ரூபா 4.50 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்ட கடித உறையொன்று விண்ணபத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

(உ) I. அஞ்சல் முகவரி (சிங்களத்தில் அல்லது தமிழில்) :-----.

II. அஞ்சல் முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :-

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

4. பரீட்சைக்குத் தோற்றும் மொழி (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) :-----.

5. (அ) இதற்கு முன் இப்பரீட்சைக்குத் தோற்றி உள்ளீர்களா?:-----.
(ஆ) முதன் முறை அல்லாவிடின் முத்திரைகள் ஒட்டப்பட்டுள் ளனவா? அவ்வாறு தோற்றி இருப்பின் இம்முறையின் பொருட்டு முத்திரைகள் ஒட்டியுள்ளதா? :-----.

முத்திரைக் கூண்டு

6. **விண்ணபப்பதாரரின் உறுதியுரை** :-

எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவகையில் -

(i) இவ்விண்ணபப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவைகளெனவும், நான் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன்முறையாக என்றபடியினால் கட்டணம் செலுத்தத் தேவையில்லை எனவும்/முதன் முறை அல்லாத படியால் ரூபா பெறுமதியான முத்திரைகள் ஒட்டியுள்ள தெனவும், இவ்விண்ணப்பத்திற்கு என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் செல்லுபடி நீக்கம் செய்யப்படுவதற்கு முன்பு பாவிக்கப்படாத முத்திரைகள் எனவும் வெளிப்படுத்து கின்றேன்.

(ii) சுகாதார சேவைத் திணைக்களத்தினால் பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டத்திட்டங்களுக்கு அமைந்து நடப்பதற்கும், இப்பரீட்சை தொடர்பான நியதிச் சட்டத்தின் படி நான் தகைமையற்றவன் எனக் காணப்படின் எனது பரீட்சார்த்தித் தன்மையை இரத்து செய்வதற்கு மேற்கொள்ளப்படும் எவ்வித தீர்மானத்திற்கும் நான் அமைவேன் எனவும் இத்தால் உறுதி மொழிகின்றேன்.

விண்ணபப்பதாரரின் கையொப்பம்.
------,

திகதி :-----.

**நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

திருவாளர்/திருமதி/செல்வி .................................. என்பவரை நான் நன்றாக அறிவதுடன், இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறை/அல்லாத படியால் ரூபா ............... பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணபப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும்/ முத்திரை ஒட்டவேண்டியதில்லை எனவும் எனது முன்னிலையில் கையொப்பம் இட்டார் எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

------,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

திகதி :-----.

**பன்முகப்படுத்தப்பட்ட பகுதி/ விசேட இயக்கத் தலைவரின் சான்றிதழ்**

திருவாளர்/திருமதி/செல்வி ................... என்பவர் வைத்திய உத்தியோகத்தர் ஒருவர்/பல் சத்திர சிகிச்சை வைத்தியர் ஒருவராக எனது பிரிவில்/ இயக்கத்தில் சேவையாற்றுகின்றார் எனவும் விண்ணபப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் விண்ணப்ப தாரரின் பெயர் வழிக்கோவையிலுள்ள விபரங்களின்படி பிழையற்ற வைகளெனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்கு தகைமைகள் உண்டு எனவும் இத்தால் சான்றுபடுத்துகின்றேன்.

-----,
பன்முகப்படுத்தப்பட்ட பகுதி/விசேட
இயக்கத் தலைவரின் கையொப்பம்.
(முத்திரை இடப்படுதல் வேண்டும்).

திகதி :-----.

(*தேவையற்றனவற்றைக் கீறிவிடவும்).

3-89

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**1995 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8 அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 4.45 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணி வரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் "சுப்றீம் கோட்" புறொடக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1995 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூ. ச. |
|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 51 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி | 51 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 504 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 1,008 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும், கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **1995 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 1,612.00 | 2,098.00 |
| II ஆவது பகுதி தொடக்கம் VI பகுதி வரை தனிப்பகுதி | 572.00 | 745.00 |
| I வது பிரிவு | 520.00 | 1,007.00 |
| II வது பிரிவு (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆதியன) | 624.00 | 1,009.00 |
| III வது பிரிவு | 468.00 | 907.00 |
| அதிவிசேட விசேட வர்த்தமானி | 3,360.0 | 4,422.00 |

முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | | விலை ரூ. ச. | அஞ்சற் செலவு (உள்ளூர்) ரூ. ச. |
|---|---|---|---|
| (அ) | I வது பகுதி | 31.00 | 5.00 |
| | II வது பகுதி தொடக்கம் VI பகுதி வரை ஒவ்வொரு பகுதியும் | 11.00 | 5.00 |
| (ஆ) | I வது பிரிவு | 10.00 | 5.00 |
| | II வது பிரிவு | 12.00 | 5.00 |
| | III வது பிரிவு | 9.00 | 5.00 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், 32, லோட்ஸ் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும்* ***அரசாங்க பிரசுராலய அதிபர், 32, லோட்டஸ் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தா பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.***

***முக்கிய கவனிப்பு.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதையும் கவனத்திற் கொள்க.***

***அட்டவணை-2007***

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **மாச்சு** | .. | வெள்ளி | 02.03.2007 | .. | நண்பகல் 12 | வியாழன் | 15.02.2007 |
| | | வெள்ளி | 09.03.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.02.2007 |
| | | வெள்ளி | 16.03.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.03.2007 |
| | | வெள்ளி | 23.03.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.03.2007 |
| | | வெள்ளி | 30.03.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.03.2007 |
| **ஏப்பிறல்** | .. | வியாழன் | 05.04.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.03.2007 |
| | | வியாழன் | 12.04.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.03.2007 |
| | | வெள்ளி | 20.04.2007 | .. | நண்பகல் 12 | வியாழன் | 05.04.2007 |
| | | வெள்ளி | 27.04.2007 | .. | நண்பகல் 12 | வியாழன் | 12.04.2007 |
| **மே** | .. | வெள்ளி | 04.05.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.04.2007 |
| | | வெள்ளி | 11.05.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.04.2007 |
| | | வெள்ளி | 18.05.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.05.2007 |
| | | வெள்ளி | 25.05.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.05.2007 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2007, சனவரி 01.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.